Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# அரிய தாளங்களில் அமைந்த அரிய வர்ணங்கள்

5

சி. சக்திவேல்

**ஆய்வு சுருக்கம்:**
உலகின் மூலப் பொருள் ஒலி ஆகும். எதிலும் வரைமுறையமைத்தல் வளர்ச்சிக்கு உதவும். அகிலமெல்லாம் அசைந்து கொண்டேயிருக்கிறது. அண்ட கோளங்கள் எல்லாம் ஒய்வின்றிச் சுழன்று கொண்டேயிருக்கின்றன. இவ்வாறு பிரபஞ்சத்தின் ஒவ்வோர் அசைவும் தாளம் தவறாமல் இயங்கி கொண்டிருக்கின்றன. அதனாலேதான் உயிரினம் வாழமுடிகிறது. மஹாகவி சுப்ரமணிய பாரதியார் குயில் பாட்டில்

"தாளம் தாளம், தாளம் ;

தாளத்திற்கோர் தடையுண்டாயின்,

சேதம், சேதம், சேதம், என்றும் கூறுகிறார்;.

இத்தாளங்கள் நமது கர்னாடக ஸங்கீதத்தில் சூழாதி (சூளாதி) சப்த (ஏழு) தாளங்கள் அவற்றின் ஜாதி பேதத்தினால் உண்டாகும் 35 தாளங்கள் அவற்றின் கதி பேதத்தினால் உண்டாகும் 175 தாளங்கள் ஆகியவை உள்ளன. மேலும் , மிகப்பழமையான நான்கு (4) வகையான சாபுத்தாளங்கள் இந்தத் தாளங்களில் இயற்றப்பட்ட வர்ணங்களின் தொகுப்பு பற்றியதாகும்.

திறவுச் சொற்கள்: வர்ணயெதி – வர்ணம் - ஸஹி - ஸஹி - ஸஹா – மதங்கரின் - ப்ருஹத்தேசீ – வர்ணத்தின் அமைப்பு – தாளம் - அறியதாளங்கள் - இயற்றிவர்கள்

முன்னுரை:-

வர்ணங்கள், பதவர்ணம், தான வர்ணம் , சௌக்கால வர்ணம் , ராகமாலிக மற்றும் நட்சத்திரமாலிக தாளமாலிக ஔடவ ராகமாலிக போன்றவை இயற்றப்பட்டுள்ளது. இவற்றில் சாபு தாளத்திலும் வர்ணம் இயற்றப்பட்டுள்ளது. மேலும் , தத்தகார வர்ணங்கள் இயற்றப்பட்டுள்ளது. இவ்வர்ணங்கள் அனைத்தும் தாளத்தை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்டுள்ளது. எனவே , இவ்வாய்வுக்கட்டுரையானது மேற்குறிப்பிட்ட அம்சத்தை அடிப்படையாகக் கொண்டு அமைகிறது.

**வர்ணயெதி**

விரிவா சொல்லுதல் அல்லது விவரித்தல் - விளக்குதல் "வர்ணயெதி இதிவர்ணம்" ஆகும்.

வர்ணம்

விளக்குவதால், விரிவாகக் கூறுதல் அல்லது விவரிப்பதால் வர்ணம் என்று பெயர் ஆகும்.

A dancer who performs varanam is in the character of heroin (நாயகி), She conveys (தெரிவிக்கிறாள்) status (நிலை) to the hero throght sakhi (epiy) சின்சியர் தோழி.

ஸகி : ஒரு நபர் வர்ணம் ஆடும்போது நாயகி என்ற நிலையில் தன் உணர்வுகளை நாயகனிடம் ஸகி மூலம் தெரிவிக்க உபயோகிக்கும் பாடல் வர்ணம்.

ஸகி : தூதிகாவாக செல்லும் போது நாயகனிடம் நாயகியின் நிலையை (நாயகியின் நிலையை தன் நிலையாக உணர்ந்து) தெரிவிக்கும் நிலையிருப்பதால் அந்த தூதிகணு மட்டும் ஸகி என்று அழைக்கிறோம்.

**Sakha**: ஒரு நாயகனின் நிலையை தன் நிலையாக உணர்ந்து செயல்படும் ஆத்ம நண்பனை ஸகா என்று கூறலாம்.

காலத்தால் மூத்த நம் கர்நாடக ஸங்கீதத்தில் இடம்பெற்றுள்ள உருப்படிகளின் முக்கியமானவை 'வர்ணங்கள்'. வர்ணம் என்றால் 'நிறம்' என்றும் 'வனப்பு' என்றும் பொருள் உண்டு. இசை மற்றும் நடன நிகழ்ச்சிகளில் வனப்பூட்டுவது வர்ணம் 'வர்ணனம்' (வர்ணனை) என்பதன் திரிபே வர்ணம் என்று கூறுவோருமுண்டு. 'நாட்டிய சாஸ்த்ரம் ' வர்ணமென்பது ஒரு இசைச்சேர்க்கை (கானக்ரியா) எனக்கூறுகிறது.

"பத வாக்ய ஸ்வரூபேன வாக்யார்த்தம் வஹனேன யத் : ட
வர்ணயத்ர ஜகத்ஸர்வம் தேன வர்னா: ப்ரகீர்த்திதா: டட"

'ஒரு பொருளைத் தெரிவிக்கும் விதத்தில் வார்த்தைகள் கோர்க்கப்பட்டு , வடிவம் பெறுகின்றபோது , அது உலகெங்கும் வர்ணம் எனப்படும். என பேசுகிறது, மதங்கரின் 'ப்ருஹத்தேசீ'.

"விக்ரு~;ட முக்த முச் முஞ்சாராத் த்ருதே மத்யே விளம்பிதர் ட
நீ சோச்சயோச்ச வர்ணானாம் ஸ்{ச்ராவ்யம் ச்லாக்ய முச்யதே: டட"

கீழ்ஸ்தாயி மற்றும் மேல் ஸ்தாயி ஸ்வரங்களோடு மிக அழகான முக்தாயிஸ் வரத்தைப் பெற்று, த்ருதம், மத்யமம், விளம்பம் எனும் மூன்று காலப் பிரமாணங்களில் , அவை செறிந்தவாறு இசைக்கப்படும் வர்ணங்கள் சிறப்பானவை: கேட்க இனிமைய பயப்பவை ", என்பது மன்னர், கும்பர் தரும் விளக்கம். ராகத்தின் முழுஸ்வரூபத்தை , அழகூட்டும் ஸ்வரச்சேர்க்கைகளையும் ப்ரயோகங்களையுங் கொண்டு , வெளிப்படுத்தும் தன்மையுடைதால் வர்ணமென்ற இசையுரு தோன்றிய தெனக்கொள்ளலாம்.

இசைப் பயிற்சிக்கான பாடக்கிரமத்தில் , கீதங்க------ கிருதிகளுக்கு முன்பும் இடம் பெறுவது 'தானவர்ணம்' – வர்ணமென்பது பொதுவாகத், பதவர்ணம் நடனத்துக்குறியது. இசை நிகழ்ச்சிகளில் முதலிடம் பெற்றது தானவர்ணம் ஆகும். 'தானம்' பாடும் முறையையொத்தாக , ஸ்வரப்பிரயோகங்களும் ஸாஹித்யமும் அதிக 'அகார'ங்களுடனிருப்பதால் இதற்கு இப்பெயர் பெற்றது. சாரீரத்தை வளமாக்கி , எவ்விதக்கமகத்தையும் எந்த வேகத்திலும் எளிதாக இசைக்கும் திறனை அளிப்பவை தானவர்ணங்கள் ஆகும். குரலைப்போன்றே விரல்களுக்கும் இது பொருந்தும். ஒரு இசைக்கலைஞனுடைய சாரீத (அல்லது விரல்) வளம் , ராக இலக்கண அறிவு இசை வழங்குந்திறமை போன்றவற்றை , அவனுக்கு எவ்வளவு வர்ணங்க் பாடமுன்டு என்பதை கொண்டே தீர்மானிக்கின்ற மரவு, அண்மைக்காலம் வரை பெரியோரிடம் இருந்து வருகிறது.

**வர்ணத்தின் அமைப்பு**

எந்தப் பாடலாயினும் அதற்கு முக்கிய அம்சங்களாக வருபவை:
உரு அமைப்பு
உள்ளே பொதிந்துள்ள கருத்து.
வர்ணத்தின் உருவமைப்பு ஐந்து பகுதிகளைக் கொண்டுள்ளது. அவையாவன:
பல்லவி: தொடக்கம் அல்லது எடுப்பு. இது, பொதுவாக இரு வரிகளாலானது.
அனுபல்லவி: இடைநிலை அல்லது தொடுப்பு. இதுவும் பெரும்பாலும் இரண்டு வரிகளையே கொண்டுருக்கும். ஏதேனுமொரு கோரிக்கை போன்ற செய்தியைப் பல்லவியும் , எவரிடம் கோரப்படுகிறதோ, அந்தப் பாட்டுடைத் தலைவனின் பெயரை அல்லது அதை உணர்த்தும் வரியைக்

கொண்டாக அனுபல்லவியும் அமைவது வழக்கம்.
முக்தாயிஸ்வரம்: அனு பல்லவிக்குப் பின்னும் அடுத்த பகுதிக்கு முன்னுமாக அமையும் ஸ்வரக்கோர்வை. ‘முக்தாய்’ என்றால் ‘முடித்தல்’ எனப்பொருள், கிருதியாக விருந்தால் , இது ‘சிட்டைஸ்வரம்’ எனும் பெயர் பெறும் ; வர்ணத்தைப் பொறுத்தவரை முக்தாயிஸ் வராமன்றே குறிப்பிடவேண்டும். தனது ‘ஸங்கீத ஸம்பரதாய ப்ரதர்சினீ ’யில் பல வர்ணங்களைக் கொடுத்துள்ள ஸ{ப்பராமதீட்சிதர், ‘முக்தாயிஸ்வரம்’ என்ற சொல்லாட்சியையே கையாண்டுள்ளார். பல்லவி முதல் முக்தாய்ஸ்வரம் வரையிலான பகுதியைப் ‘பூர்வாங்கம் (முதல் தொகுதி) அடுத்து வரும் பகுதிகளை உத்தராங்கம் (பின் தொகுதி) எனவும் கூறுவார்கள். பூர்வாங்கத்தை முடிப்பது முக்தாயிஸ்வரம். இது , இரண்டு அல்லது நான்கு ஆவர்த்தங்களில் அமைந்திருக்கும். சில வர்ணங்களில் , இதற்கு ஏற்ற ஸாஹித்யமும் இருப்பதுண்டு. கிருதிகளுக்குச் ‘சிட்டைஸ்வரம்’ இருக்கவேண்டும் மென்ற கட்டாயமில்லை; மாறாக, வர்ணங்களுக்கு ‘முக்தாயிஸ்வரம்’ இருந்தே ஆகவேண்டும். ஒரு கிருதியில் ‘சிட்டைஸ்வரம்’ காணப்படுமானால் அதை , அந்தத் க்ருதிகாத்தாவே இயற்றினாரெனக் கூறிவிடமுடியாது. ஆனால், வர்ணத்தை இயற்றுபவரே, அதன் முக்தாயிஸ்வரத்தையும் இயற்றுவார். முக்தாயிஸ்வரம் முடிந்ததும் பல்லவியைத் திரும்ப எடுக்கப்படும்.
எத்துக்கட: உத்தராங்கத்தின் தொடக்கம் இது. ‘எத்துக்கடை’யென்றும் சிலர் இதனைக் கூறுவர். கடை அல்லது முடிவுப் பகுதியைப் எடுத்தல் என்பது இச்சொல்லின் கருத்து. பின்பகுதியைத் தொடங்குவதால் இதற்கு இப்பெயர் எனலாம். இது, ஒரே ஆவர்த்தத்தில் அமையும் ஸாஹித்யமாகும்.
எத்துக்கட ஸ்வரங்கள்: எத்துக்கடப் பகுதியைத் தொடரும் ஸ்வரவரிசைகள் ஒவ்வொரு வரிசை நிறைவிலும் எத்துக்கட ஸாஹித்யமே எடுக்கப்படும் பொதுவாகத் , தான வர்ணங்களில், முக்தாயி மற்றும் எத்துக்கடஸ்வரங்களுக்கு ஸாஹித்யம் இருக்காது.
அநேகமாகப், பெரும்பான்மையான வர்ணங்கள், சிங்காரச்சுவை செறிந்தவையே. அவ்வாறில்லாது , பக்தியை நேரிடையாக வெளிப்படுத்தும் வர்ணங்களுமுள்ளன. தானவர்ணங்கள் , மத்யம் காலத்தில் அமைந்து சில சமங்களில் , மூன்று காலப்பிரமாணங்களிலும் இசைக்கப்படுவதுண்டு. தானவர்ண மென்பதை முதன்முதலாக இயற்றியவர் பச்சிமிரியம் ஆதியப்பய்யா என்றவொரு கருத்து இசையுலகில் நிலவுவதோடு, அக்காரணமாகவே, அவருக்குத் தானவர்ண மார்க்கதர்சியென்ற சிறப்புப் பெயரும் சூட்டப்பட்டுள்ளது.

**தாளம்**

‘தாளம்’ என்பது காலத்தைப் பகுத்து இயக்குவது. ‘காலம்’ என்பது பார்க்கப் படாததும் , கேட்கப்படாததும் ஆகும். ஆனால் , கையில் எண்ணித் தாளத்தைப் போடும்போது , கேட்கப்படாத காலத்தைக் கேட்கப்படும் ஒலிகளின் மூலம் பகுத்தும் வகுத்தும் காட்டுகிறோம். கேட்கப்படாத காலத்தைக் கேட்கப்படுகின்ற காலமாக மாற்றிவிடுவதும் , அக்காலத்தைப் பகுத்துக் காட்டிவிடுவதும் தாளத்தின் பயனும் பண்புமாகும்.
அரிய தாளங்களில் இயற்றப்பட்ட வர்ணங்களும் இயற்றியவர்களும்:

| வ. எண் | ராகம் | தாளம் | பாடல் | இயற்றியவர் |
|---|---|---|---|---|
| 1 | அடாணா | ரூபகம் | மனஸாதெலிணயுன்டி | தஞ்சை பொன்னையா |
| 2 | அடாணா | திஸ்ரஅடதாளம் | கருணாகருடவனுசு | தஞ்சாவூர் மு. பொன்னையா பிள்ளை |
| 3 | அடாணா | கண்ட அடதாளம் | ஶ்ரீமஹாராஜாச்ரித | சுப்ராம தீட்சிதர் |
| 4 | அம்ருதவர்ஷனி | சதுஸ்ர ரூபகம் | நின்பாதம் | தருமபுரம் யு. கோவிந்தராஜன் |
| 5 | அம்ருதவர்ஷனி | சதுஸ்ர ஜம்ப | வாளா இருந்தால் வழியில்லை | ஆ. ரங்கநாயகி |
| 6 | அம்ருதவர்ஷனி | சதுஸ்ர அட | ஶ்ரீ வெங்கடாசல பதயே | மதுரை வு ஶ்ரீனிவாஸன் |
| 7 | அம்ருதவர்ஷனி | மிஸ்ர ஜம்ப | வலசியுன்னமானின் | கூரைநாடு நடேசபிள்ளை |
| 8 | ஆபோகி | கண்ட த்ரிபுட | ராமுனி கோரி | ராமநாதபுரம் ஶ்ரீனிவாஸ அய்யங்கார் |
| 9 | ஆரதி | திஸ்ர த்ருவம் | நின்னெந்தோவேடின | ஆ. நாதமுனி பண்டிதர் |
| 10 | உதயரவிசந்திரிகா | திஸ்ரத்ரிபுட | ஆதியே பரஞ்ஜோதியே | திருப்பூர் சு. சுப்பிரமணியம் |
| 11 | கல்யாணி | திஸ்ரமட்யம் | நீவேகதியணி | சியாமா சாஸ்திரிகள் |
| 12 | தோடி | திஸ்ர ஏகம் | கோபம் கொள்வதேனோ | தஞ்சாவூர் மு. பொன்னையாபிள்ளை |

| | | | | |
|---|---|---|---|---|
| 13 | நளினகாந்தி | ஆதி – திஸ்ரகதி | சகலஜந்நாயகி | திருப்பூர் சு. சுப்பிரமணியம |
| 14 | நளினகாந்தி | மிஸ்ர த்ருபுடை | ஸ்ரீகுரு ஸார்வமௌம் | மதுரை வு ஸ்ரீனிவாஸன் |
| 15 | நாடகப்ரியா | மிஸ்ர சாபு | ஸாரஸாட்சிரோ | தஞ்சாவூர் மு. பொன்னையாபிள்ளை |
| 16 | நீதிமதி | ஸங்கீர்ண த்ருபுட | பாதாரவிந்த | மதுரை வு ஸ்ரீனிவாஸன் |
| 17 | பூர்விகல்யாணி | மிஸ்ர ரூபகம் | ஸாரஸாட்சி | ஆ. நாதமுனிபண்டிதர் |
| 18 | பூர்விகல்யாணி | கண்ட மட்யம் | ஸாமி நின்னே | மைசூர் வீணைசே~ண்ணா |
| 19 | பெஹாக் | சதுஸ்மட்யம் | தாமரயாட்சி | சித்வீணா ரவிகிரன் |
| 20 | பேகட | ஸங்கீர்ணமட்யம் | மஹி~hஸ{ர | மைசூர் வீணைசே~ண்ணா |
| 21 | பைரவி | தாளமாலிகா, சதுஸ்ர த்ருவம் , மட்யம், ரூபகம், ஜம்ப, த்ருபுட, அட, ஏதம் | கருணாஹரிசாரதே | லலிதா நவிலே |
| 22 | ராகமாலிக | பஞ்ச த்ருபுடை | காமிதார்த்தாய | மைசூர் ஊ. ரங்கய்யா |
| 23 | ஸ்ரீ ஜய் | கண்ட சாபு | பாதம் பணிந்து | தருமபுரம் யு. கோவிந்தராஜா |
| 24 | சண்முகப்ரியா | திஸ்ரத்ருவம் | ஸாரஸமுதேனன்னு | முடிகொண்டான் வெங்கடாராமையர் |

முடிவுரை:

பழக்கத்தில் உள்ள ராகம் , அபூர்வராகங்கள் போன்ற ராகத்தி வர்ணங்கள் இயற்றப்பட்டுள்ளது. குறிப்பாக காயகசிகாமணி ஹரிகேசவ நல்லூர் முத்தையா பகவதர் அறிமுகப்படுத்தப்பட்ட நிரோ ~;ட

ராகத்திலும் வர்ணம் இயற்றப்பட்டுள்ளது. இந்த ஆராய்சி கட்டுரை முடிவில் ஸிந்து பைரவி ராகத்தில் வர்ணம் இயற்றியதாக தெரியவில்லை பெரும்பாலும் வர்ணத்தில் இலக்கனத்திற்கு உட்பட்டுதான் இயற்றப்பட்டுள்ளது. ஆனால், சில வாக்கேயே காரர்கள் மாறுபட்ட விதத்திலும் இயற்றியுள்ளார்கள்.

**துணை நூல் பட்டியல்**

1. தானவர்ண தரங்கிணி – டீ.ஆ சுந்தரம் ர ராஜல~;மி அறக்கட்டளை
2. கூத்த நூல் - ச.து, சு, யோகியார் - சாரதா பதிப்பகம்
3. பாரதியார் கவிதைகள் - புலவர் அழ. அண்ணாமலை அபிராமி பதிப்பகம்
4. இந்திய இசைக்குருவூலம் - Dr. N. கே. ஏ. பக்கிரிசாமிபாரத் - GURUKULAM ACADEMY
5. தாளசமுத்திரம் - மு. வாசுதேவ சாஸ்திரி – சரசுவதி மகால் நூலகம்
6. மத்தவியல் - Dr. V. P. K Sundaram – INSTITUTE OF ASIAN STUDIES
7. SANSKRIT – TAMIL – ENGLISH- S. V. RADHAKRISHNA. SASTIRI- SANSKRIT EDUCATIONL SOCIETY.